Registered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol. 38—No. 2

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | குரோதி மாசி 1965 பிப்ரவரி | இதழ் 2

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர் : மு. அருணசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணு 4

சமாஜச் செய்திகள்

28-2-65 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

நம் சமாஜம், ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபை ஆகிய வைகளின் சார்பில் வள்ளலார் விழா 31—1—65 ஞாயிறு மாலை 6 மணிக்குப் பக்தஜன சபையில் நிகழ்ந்தது. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T. அவர்கள் தலைமையில் திரு. கீ. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள் 'இராம லிங்கர் நெறி' என்பது பற்றிப் பேசினார்கள்,

சமாஜ அன்பர்களுக்கு

சென்ற ஆண்டு புதுவை மாநாட்டில் சில அன்பர்கள் பப்பத்துறுப்பினர் வீதம் சேர்த்துத் தந்தனர். அவர்களைப் போன்று இவ்வாண்டும் அவர்களும் பிற அன்பர்களும் உறுப்பினர்கள் பலரைச் சேர்த்துத்தரின் மிகவும் நன்றாக யிருக்கும். அவ்வாறு பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தந்துள அன்பர்கள் அவர்களால் சேர்க்கப் பெற்ற உறுப்பினர் பட்டியல்களுடன் ரூபாயையும் செயலா ளருக்கு அனுப்பினால் சித்தாந்தத்தில் வெளியிட வாய்ப்பா யிருக்கும். சென்ற ஆண்டு சேர்த்தவர்கள் புத்தாண்டுக்கும் உறுப்பினர் கட்டணம் செலுத்திவிட்டார்களா என்பதை யும் கவனித்து வசூலித்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாசி மாத விசேட தினங்கள்

8 (19—2—65) எறிபத்த நாயனார் விழா
15 (26—2—65) காரி நாயனார் விழா
19 (2— 3—65) கோச் செங்கட் சோழ நாயனார் விழா

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 38	குரோதி மாசி 1965 பிப்ரவரி	இதழ் 2

சைவ சித்தாந்த மகா சமாஜ
59-ஆம் ஆண்டு விழா

சைவர் மாநாட்டுத் தலைமை உரை

(க. அரங்கசாமி முதலியார்)

தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்

—நாமக்கல் கவிஞர்.

இப்பாவை விளக்குவதே இன்று என் தலைமை உரையாக அமையும்.

உலகிலுள்ள மக்களை 14 இனங்களாகப் (Races) பிரித்துள்ளார் மானிட நூலறிஞர், இப்பதினான்கு பெரும் பிரிவுகளில் தமிழினம் ஒன்று. முதலில் இவ்வினத்தின் தொன்மையை ஆராய்வோம்,

தமிழரின் தொன்மை

நிலநூல்படி (Geology) இமய முதல் குமரிவரையி லுள்ள நிலப்பரப்பு ஒரு காலத்தில் கடலால் சூழப்பட்ட தீவாக இருந்தது. தற்போது வானோங்கி உயர்ந்திருக்கும் இமயமலைத்தொடர் கடலால் மூடப்பட்டிருந்தது. இது சுமார் 25,000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலை. காலப் போக்கில் இக்கடல் பாகம் உயர்ந்து மலையாக வளர்ந்த பிறகு மேற்கண்ட தீவு தீவகற்பம் அல்லது தீவக்குறை (Peninsula) ஆனது. ஆதியில் தீவாக யிருந்த நிலப்பரப்பு நாவற்காடாக இருந்தமையால் "நாவலந் திவு" என்று அழைக்கப்பட்டிருந்ததாகப் பின்னிட்ட இலக்கியங்களால் தெரிய வருகிறது.

"நாவலோங்கிய மாபெருந்திவு" (மணி 2–1)
"முந்நீர் நாவல் தழுவிய இந்நானில" (கோவை–191)
"மாக்கடல்சூழ் நாவலந்திவு ஆள்வார்" (ஏலாதி-56)
"நாவலகலிடம்" (பு—வெ—8–17)

தீவுப்பாகம் தீவகற்பமான பிறகும் தீவு என்றே தொடர்ந்து அழைக்கப்பட்டு வந்தது. இது இயற்கையே.*

* சுமார் 3500 ஆண்டுகளுக்குமுன், மேற்கண்ட நிலப் பரப்பின் வடமேற்கு வழியாக வந்து குடியேறிய ஆரியர் களும், இந்நிலப் பரப்பைத் தங்கள் மொழியில்

"ஜம்பு த்வீபம்" என்று அழைத்து வரலாயினர். (நாவல்—ஜம்பு; தீவு-த்வீபம்") ஆரியப்ராமணர் சடங்கு களை ஆரம்பிக்கும்போது "ஜம்புத்வீபே, பரதக்கண்டே" என்று ஆரப்பித்தனர். இதன் பொருள் நாவலந்தீவில் பரதன் ஆண்ட வடபாகம் என்பதாம்.

• உதாரணம்: கோவை நகரின் ஒரு பகுதிக்குச் சுக்ர வாரப் பேட்டை என்று பெயர். இப்பகுதியில் வெள்ளிக் கிழமை தோறும் சந்தை கூடுவதுண்டு. சந்தை நின்று விட் டது ஆயினும் இன்றும் சுக்ரவாரப்பேட்டை என்றே அழைக் கப்பட்டு வருகின்றது.

• இதனுல் தமிழர் எக்காலத்திலும் பிறநாடுகளிலிருந்து தென்னுட்டுக்குக் குடியேறினவர்களல்லர் என்பது வெளிப் படை,

ஆரியப் பிராமணர் தென்னாடு வந்து இங்கிருந்த மக்களுக்குப் புரோகிதர்களாகி அவர்களுக்காகச் செய்யும் சடங்குகளை "ஜம்புத்வீபே, பரதக்கண்டே" என்று சொல்லித் தொடங்குவதை இன்றும் காண்கிறோம். மேற்கண்ட முந்நீர் நிலப்பரப்பு கி. மு. 322-ல் அலெக்சாண்டர் படை எடுத்துச் சிந்துநதிவரையில் வந்த பிறகு "இந்தியா" என்ற பெயர் பெற்றது. இதன் பொருள் சிந்துநதிக்கு அப்புறமுள்ள நிலம் என்பதாம். இப்பெயரே பின்னர் நிலைத்துவிட்டது. இந்நூற்றாண்டுமுதலில் சிந்துநதிபாகத்திய புதைபொருள் ஆராய்ச்சி காட்டிய சிறந்த நாகரிகம் 6000-ஆண்டுகளுக்கு முந்தியதென்றும் அந்நாகரிகம் திராவிட நாகரிகமென்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவற்றால் தமிழரின் தொன்மையை ஒருவாறு கண்டோம். அடுத்தபடி தமிழ் இனத்தின் குணத்தைப் பற்றிச் சிந்திப்போம். குணம் என்பது பண்பாடு அல்லது நாகரிகம். இதை 'தொன்மை' என்றார் தொல்காப்பியர். "தொல்வரவு" (Cultural heritage) என்றார் திருவள்ளுவர்.

தமிழரின் தொல்வரவு:

தொல்வரவு என்பது ஓரினத்திடையே தொன்றுதொட்டு-பாரம்பரியமாய் வருவதாகும். இப்பண்பாட்டை அவ்வினத்தின் பழக்க வழக்கங்களாலும், இலக்கியங்களாலும் காணலாம். இவ்விரண்டினுள் இலக்கியமே சிறந்த சான்றாகும். தமிழ் நூல்களுள் மிகப் பழையது தொல்காப்பியம். இது தமிழ்மொழியின் இலக்கணமாகும். இதன் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு. இலக்கணத்திற்குமுன் இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டும். இவை இப்போது காணப்படவில்லை. நூல்களுக்கு முந்தியது மொழி. இம்மொழியைக் கொண்டுதான் தமிழரின் தொல்வரவை ஒருவாறு காண முயல வேண்டும்.

மத்திய ஆசியாவிலிருந்த ஆரியர்கள் சுமார் 3500-ஆண்டுகளுக்கு முன் மூன்று பிரிவினர்களாகப் பிரிந்து ஒரு பிரிவினர் இந்தியாவின் வடமேற்குக் கணவாய்களின் வழியாய் வந்து குடியேறினர். இவர்களுக்கு இந்திய ஆரியர்களென்று பெயர். மற்றொரு பிரிவினர் பாரசீகத்தில்

குடியேறினர். இவர்களுக்கு இரேனியன் (Iranian) ஆரியர்களென்று பெயர். மூன்ருவது பிரிவினர் மேற்கே ஐரோப்பாவின் பகுதியாகிய யவனத்தில் (Ionia or greece) குடியேறினர். இவர்களுக்கு ஐரோப்பிய ஆரியர்கள் என்று பெயர். இம் முப்பிரிவினர்களும் குடியேறிய நாடுகளில் குடியேற்றத்திற்கு முன்னமேயே, முறையே திராவிட நாகரிகமும், பாரசீகநாகரிகமும், மைசீனிய (Myccnia) நாகரிகமும் இருந்தன. நாளடைவில் பழையதும் புதியதும் கலந்து சமயத் துறையில் முறையே இந்து, இஸ்லாம், கிறிஸ்துவமாயின. குடியேறுவதற்கு முந்தி ஆரியர்களுக்கு மொழியுண்டு; எழுத்து இல்லை. ஆகையால் குடியேறிய நாட்டு மக்களின் எழுத்துக்களை ஏற்ருர்கள். இரேனியப் பிரிவின் நெடுங்கணக்கு—அலீப், பே, பே, தெ, டெ. சே. (Aliph, be, be, the' te, se,') என்று தொடங்கியது. ஐரோப்பியப் பிரிவினரின் நெடுங்கணக்கு ஆல்பா, பேடா, காமா, டெல்டா (Aliph, beta gama, delta) என்று தொடங்கியது. இந்தோ ஆரியப் பிரிவு அக்காலத்திய திராவிட மக்களின் நெடுங் கணக்காகிய அ, ஆ, இ, ஈ, உ, ஊ என்ற எழுத்துத் தொகுதியை ஏற்றது. உலகத்திலுள்ள பற்பல மொழிகளில் திராவிட மொழியொன்றே உயிரெழுத்துகளைத் தனிப்பிரிவாகவும், மெய் எழுத்துக்களை மற்ளுரு பிரிவாகவும் கொண்டது. மற்ற மொழிகளில் இரண்டும் கலந்தனவே. மொழி ஒப்பியல் அறிஞர் (Comparative philologist) இந்நூற்ருண்டின் முற்பகுதியில் கண்ட முடிபானது: 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வேதகால நூல்களில் 450 திராவிடச் சொற்கள் புகுந்துவிட்டன என்பதாம். (அண்மையில் தமிழாசிரியர்கள் நடத்திய ஆராய்ச்சியில் இச்சொற்களின் தொகை 566-ஆகியது.) சொற்கள் மாத்திரமா புகுந்தன? சொற்களின் பொருளும் கருத்தும் புகுந்தன. அதிலும் தமிழ்ச் சொற்களெல்லாம் ஆதியில் காரணச் சொற்களே. பின்னர் தமிழன் தன் பழைய உயர்ந்த கல்வித் தரத்தையிழந்து தற்குறியான பிறகு சொற்களும் நாளடைவில் இடுகுறியாயின.

கி. மு. 1500 முதல் சுமார் 1000 ஆண்டுகள் கொண்ட நீண்ட காலத்தில் இரு பெருமொழிகள் கலந்தன. கருத்

துக் களஞ்சியங்கள் கலந்தன. பண்பாடுகள் கலந்தன. குருதியும் கலந்தது, பிரிக்க முடியாத கலப்பாய் விட்டது. இக்கலப்பில் முக்கால் பங்கு திராவிடம், கால் பங்கு ஆரியம் (History and culture of Indian people vol. I, vedic Page 164-5 Editor K. M. Munshi இக்கலப்பைத்தொல்காப்பியத்திலேயும், சங்க நூற்களிலேயும் காண்கிறோம்.

நமக்குத் தற்போது கிடைக்கக் கூடிய பழைய நூல்கள் தொல்காப்பியமும் சங்க இலக்கியமுமே. இவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவையே. அதற்கு முற்பட்ட தமிழ் நூல்கள் என்னாயின? அழிந்தன. ஏன் அழிந்தன? எப்படி அழிந்தன? தமிழர் தம் நூல்களை பனையோலையில் எழுதி வந்தனர். அதே காலத்தில் வேறு நாடுகளில் பேபிரஸ் (Papyrus) என்ற தாள் அட்டைகளிலும், மரப் பட்டைகளிலும், மரப்பலகைகளின் மீதும், சுட்ட களிமண்களிலும், உலோகத் தகடுகளிலும் பதனிட்ட தோலிலும் எழுதி வைத்தனர். பழந் தமிழன் எழுதி வைத்த பனையோலை எளிதாக அழியக் கூடிய பொருள். அது செல்லுக்கும், தீயினுக்கும் இரையாயிற்று. அழிவுக்கு மற்றொரு காரணம் பழைய ஏடுகளை ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டு வந்த மூடப் பழக்கம். இது இன்றும் நடந்து வருவதாகக் கேள்வி. ஆகையால் நமது 'தொல்வரவை'—பழைய பண்பாட்டை—அறிய வேண்டுமானால் வடமொழி நூல்களில் தேடவேண்டிய நிலையிலுள்ளோம். உதாரணமாக, தமிழரிடையே தொன்று தொட்டு வந்திருக்கும் இறை, உயிர்,உலகம் ஆகிய முப்பொருளும் அனாதியென்பதை ஸ்வேதாஸ்வதர உபநிஷத்தில் காணவேண்டியிருக்கிறது. மேலே சொன்னபடி ஆரிய நாகரிகமும், திராவிட நாகரிகமும் பிரிக்க முடியாமல் கலந்த இந்திய நாகரிகமாய் விட்டது. இக்கலப்பாகிய தேறலில் புராணங்களும் சடங்குகளும் 'வண்டல்' பாகம்; இவ்வண்டலில் இக்காலத்துக்கு வேண்டாதவற்றைத் தள்ளவேண்டும். தேறலின் தெளிவுப் பாகமாகிய ஆன்மீக தத்துவங்களைக் (Spiritual truths)கற்றுச்சிந்தித்துத்தெளிந்துகைக்கொள்ளவேண்டும்.

ஞானம் என்பது எல்லா மக்களுக்கும் ஆண்டவன் தந்த ஆறுவது அறிவாகும். இதை மக்கள் விஞ்ஞானம்

என்றும், மெய்ஞ்ஞான மென்றும் பிரிக்கிறுர்கள். இப்பிரிவில் முரணுக்கு இடமில்லை. மெய்ஞ்ஞானம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. விஞ்ஞானம் நாளடைவில் வளர்ந்து வருகிறது. சென்ற நூறு ஆண்டுகளுக்குள் வெகுவேகமாய் வளர்ந்து விட்டது. ஒரு நாளில் நடந்தோ, மாட்டு வண்டியிலோ 15 மைல் சென்ற மனிதன் இன்று ஒரு நாளில் 15,000 மைல் வானவெளியில் செல்லும் ஆற்றலைப் பெற்று விட்டான். அதாவது போக்கு வரத்துத் துறையில் உலகம் ஆயிரம் மடங்கு சுருங்கி விட்டது. பூசினிக்காய் சுண்டைக்காயாகச் சுருங்கி விட்டது. அதுபோல மெய்ஞ்ஞானமும் வளர வேண்டுமன்றே? இவ்விரு துறைகளிலும் பழந் தமிழர் பல்லாயிர ஆண்டுகளுக்கு முந்தியே மேம்பட்டிருந்தார்களென்பதை அவர்களது மொழியில் காணலாம்.

மெய்ஞ்ஞானத் துறை:

உடல், உயிர் என்ற சொற்களை ஆராய்வோம். உடல் என்ற சொல்லும்,' உடை என்ற சொல்லும், 'உடு' என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தவை. உயிர் என்ற சொல்லுக்கு உய் என்பது வேர்ச்சொல். இதன்பொருள் பிழைத்திரு, சாகாமலிரு என்பது. ஒருவன் இரண்டொரு ஆண்டிற்கொருமுறை சட்டையை மாற்றிக் கொள்வதுபோல் உயிர் உடலை மாற்றிக்கொள்கிறது.

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு --(குறள்—336)
உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. —(குறள்—339)

இதனல் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னேயே தமிழன் மறுபிறப்புண்மையை அறிந்தானென்பதைக் காண்கிறேம். இவ்வடிப்படையான உண்மையில் மற்றப் பேருண்மைகள் (தத்துவங்கள்) அடங்கும். இதனலன்றே ஒரு சங்கப் புலவர் 'ஒரு தமிழன் மறுபிறப்பு இல்லை என்று சொல்லுவானுனல் அவன் மடையன்' என்கிறுர்.

மறுபிறப்பில்லெனும் மடவோர்உன்
திருவடி சேரார் (பரி—3—2)

இப்பிறப்பின் நல்வினை தீவினைக்கேற்றவாறு மறு பிறப்பு அமையும் என்பதும் பழமையான கொள்கையே. —(புறம்—29)

ஆயினும், இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும் அறவிலை வணிகம் கூடாது என்பது தமிழரின் குறிக்கோள். (புறம் 134)

கடவுள் வழிபாட்டிலும் அக்குறிக்கோளே தக்கது.

யாம் இரப்பவை பொருளும் பொன்னும்
போகமும் அல்ல, நின்பால் அருளும்
அன்பும் அறனும் மூன்றுமே (பரி 5—78)

கடைசியாக இம்மெய்ஞ்ஞானத் துறையில் காண வேண்டியது, ''அனைத்தும் நீ, அனைத்தின் உட்பொருளும் நீ''—(பரி 3—68) என்னும் நிறைமொழியும் மறைமொழியுமாகிய மந்திரம். (தொல் செய்–176; குறள்-28) இதுதான் 6000 ஆண்டுகளுக்கு முன்னிருந்து தமிழன் வழிபட்டுவரும் சிவலிங்கமாகிய குறியும், அக்குறியின் பொருளுமாம். சிந்தித்துத் தெளிக. அடுத்தபடி விஞ்ஞானத் துறையில் சிறிது இறங்குவோம்.

விஞ்ஞானத்துறை:

அண்டகோடிகளில் ஒன்றாகிய இப்பூவுலகைத்தமிழன் பல்லாயிர மாண்டுகளுக்கு முன்பே 'ஞாலம்' என்றான். இதன் பொருள் 'தொங்குவது' அதாவது ஆகாயத்தில் உருண்டோடிக் கொண்டிருப்பதென்பது. உலகப் பிற மக்கள், மேனாட்டார் உள்பட, இது தட்டையா யிருந்ததாக எண்ணினர். இதைத் தாங்கியிருப்பவன் அட்லாஸ் (Atlas) என்ற ஓர் சூரன் என்றார்கள். இந்திய ஆரியர் எட்டு யானைகளோ (அஷ்டகஜங்கள்) ஒரு பாம்போ (ஆதி சேஷன்) இதைத் தாங்கியிருப்ப தென்றார்கள். தமிழில் 'ஞாயிறு' என்ற சொல்லும் அப்பொருளதே.

சூரிய மண்டலத்திலுள்ள பல கோள்கள் ஒன்றையொன்று ஒழுங்காகச் சுற்றிக்கொண்டிருக்கும் சக்தியைப்

"பரிப்பு" என்ருன் தமிழன். பல்லாயிர ஆண்டுகளுக்கு முன் (புறம் 30) 'பரிப்பு' என்ற சொல்லின் பொருள் "இத்துணை நாழிக்கு இத்துணைத் தூரத்தில் இத்துணை வேகத்தில் செல்லும் இயக்கம்" (One planet revolving round another at a specefic Distance aud a specific speed) என்பதாகும். அதே புறப்பாட்டில் 'வறிது நிலைஇய காயம்' என்ற சொற்ருெடரைக் காண்கிருேம். இதன்பொருள் மேலே செல்லச்செல்ல காற்றின் அழுத்தம் குறைகிறதென்பது (Ravity of atmosphere as we go up). இன்றும் இந்த அனுபவத்தை இமயமலைமேல் கைலாச யாத்திரை செய்பவர்கள் பெறுகிருர்கள். தமிழன் கடலோடி உலகின் பல பாகங்களுடன் தொடர்பு கொண்டதோடு, வடக்கெல்லையாயமைந்த இமயத்தையும் காலால் கடந்து சினம் முதலிய தேசங்களுடன் தொடர்புகொண்டானென் பதை அறிகிருேம். மேற்கண்ட புறப்பாட்டு பழங்காலத் தமிழரின் விஞ்ஞான அறிவின் உச்ச நிலையைக் காட்டுகிற தன்ருே!

அன்பர்களே! முன்னே சொல்லியபடி இந்து மதம் என்ற கலப்புத்தேறலில் வண்டலைப்பிரித்துத் தெளிவைக் கொள்வது எளிதான செயலன்று. ஒரு நாகரிகம் மற்ருெரு நாகரிகத்துடன் பல்லாயிரமாண்டு கலந்து வாழ்ந்து விட்ட பிறகு அவ்விரண்டையும் தனியே பிரிக்க முயலுவோமாயின் உரு முழுமையும் குலைந்து காணப்படும். இதை நாமறிந்த ஓர் உதாரணத்தைக்கொண்டு பார்க்கலாம். சென்னை மயிலாப்பூரின் ஒரு பகுதிக்கு அம்பட்டன் வாராவதி (Barbers bridge) என்று பெயர். இப்பெயரைச் சென்னைமாநகர ஆவணங்களிலும் காணலாம். அங்குள்ள வாராவதி அல்லது பாலம் ஹாமில்டன் (Hamilton) என்ற பெயர்கொண்ட ஆங்கிலப் பொறியரால் (Engineer) கட்டப்பட்டது. ஹாமில்டன் என்ற சொல் அம்பட்டன் என மருவி, அம்பட்டன் என்ற சொல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு பார்பர் (Barber) என்ருயிற்று. சுருங்கச் சொல்லில் பொறியர் ஹாமில்டன் துரை இன்று அடப்பம் சுமக்கும் அம்பட்டனுகக் காட்சி யளிக்கிருர். இத்தகைய சீர்கேடு நம் சமயத் துறையில் அளவு கடந்த தீமையை உண்டாக்கி விட்டது. ஆரியர் இந்தியாவுக்கு

வருமுன் பல்லாயிர மாண்டுகளாகத் தொழுது வந்த சிவ லிங்கங்கள் பல, மஹேஞ்சதோரோ புதை பொருள் களில் கிடைத்துள்ளன. அவ்வுருவத்தின் பொருளை யறி யாத ஆரியர்கள் அதை 'சிஸ்ன தேவதை' என்று பழித் தார்கள். இப்பழிமொழி ரிக் வேதத்தில் ஏறிவிட்டது. பிறகு நாளடைவில் அவர்கள் சிவலிங்கத்தின் தத்து வத்தை உணர்ந்து அதை'லக்ஷ்யதர்ஷ்ட்யத்'எனச்சொல்லித் தொழலானார்கள் (லக்ஷ்யதர்ஷ்ட்யஉயர்ந்த குறிக்கோளைக் காட்டுவது). ரிக் வேதத்தை மொழி பெயர்த்த மேனாட் டவர் ஆதியில் கொண்ட தவறான கருத்தை நம்பி னார்கள்; இன்றும் நம்பி வருகிறார்கள். வட அமெரிக்கா வில் (USA) ஆங்கிலத்தில் பிரசுரமாகும் லைப் (Life) என் னும் மாதப் பத்திரிகை (19—11—51 பக்கம் 68) அடி யிற் கண்டவாறு கூறியுள்ளது: "இந்தியா முழுவதும் இந்துக்களில் பெரும்பான்மையோர் வழிபடும் தெய்வம் லிங்கம் என்னும் ஆண் குறியாகும். இதை எல்லாச் சிவன் கோயில்களிலும் காணலாம். இவர்களிடையே இந்தியா தற்போது முயலும் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் எப் படி நிறைவேறும்?" இந்தப் பத்திரிகை குறைந்தது ஒரு லட்சம் அச்சிடப்பட்டு உலகம் முழுவதும் பரவுகிறது. இந்தியாவிலும் ஆயிரக் கணக்கில் வாங்கி வாசிக்கப்படு கிறது. இதற்கு மறுப்பு அதே பத்திரிக்கையில் சைவர் கள் எழுதியிருக்கவேண்டும். எழுதியதாகத் தெரியவில்லை. இத்தவறான கருத்து சில தமிழ் நூல்களிலும் புகுந்து நிலைத்து விட்டது.

ஒருமைப்பாடு

இக்காலத்தில் தேசிய ஒருமைப் பாட்டின் முக்கியத்து வத்தை எல்லோரும் பேசுகிறார்கள். 'பல்லாயிரம் ஆண்டு களுக்கு முந்தியே உலக ஒருமைப்பாட்டைக் கண்டவன் தமிழன். 2000 ஆண்டுகளுக்கு முன் "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" (புறம்–192) என்று சொல்லியும், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் நன்றே நினைமின்" (திருமந்திரம் 2104 என்றோதியும் வாழ்ந்தான் தமிழன். சங்க காலத்தில் பரிபாடற் றொகுதியின் 3–ஆம் பாட்டில் திருமாலைப் புகழ்ந்தும், 5–ஆம் பாட்டில் முருகனைப் புகழ்ந்

தும், பாடிய கடுவன் இளஎயினனூர் சைவரோ, வைண் வரோ என்று ஐயமுறும் வகையில் அக்காலத்திய சைவ வைணவ ஒருமைப்பாடு காட்சி யளித்தது. வட வேங்கடத்தில் சங்கரநாராயண உருவத்தைக்கண்டுகளித்த முதலாழ்வார்களிலொருவராகிய பேயாழ்வார் "திருமலேமேல் எந்தைக்கு இரண்டுருவம் ஒன்ருய் இசைந்தது" என்ருர் (பிரபந்தம்–2344), தில்லேயில் கூத்தப்பிரான் சந்நிதிமுன் திருமாலே யமைத்துத் தில்லே மூவாயிர தீக்ஷதர்கள் வழிபாடு நடத்தி வந்தார்கள். "தில்லேநகர்த் திருச்சித்ர கூடந்தனுள் அந்தணர்கள் ஒரு மூவாயிரவரேத்த அணிமணியாசனத்திருந்த அம்மான் தானே" என்ருர் குலசேகரர். (பிரபந்தம்–744) பின்னர் சில சைவ சமய வெறியரின் தூண்டுதலால் ஒரு சோழமன்னன் அந்தத் திருமால் சிலேயைத் தூக்கிக் கடலில் எறியச்செய்தான். நாளடைவில் தமிழ்நாட்டில் சைவருக்கும் வைணவருக்கும் பகைமை முற்றிற்று. ஒருவரை யொருவர் தாக்கிப் பேசினூர்கள், எழுதினூர்கள்.

சுமார் 400 ஆண்டுகளுக்குமுன் சிவாக்ரயோகி என்ற ஒரு சைவப் பெரியார் தாம் எழுதிய "பாஞ்சராத்திரமத சபேடிகா" முதலிய நூல்களில் வைணவத்தை வைதார். சபேடிகா என்ருல் கையால் அறைதல். அதாவது,

"சங்கத் தமிழ்மாலே முப்பதும் தப்பாமே"
(திருப்பாவை—30)

சாற்றினே னென்று மார்தட்டிச் சொல்லிய தமிழ்ப் பெண்மணியையும்,

"அரியை அயனே அரனே அரற்றி அவாவற்று
விடுபெற்ற குருகூர்ச் சடகோபன் (ப்ரபந்தம்—3776)

என்ற பச்சைத் தமிழரையும் அறைதலாகுமன்ருே?

* இச் சைவப் பெரியார்தான் தமிழரின் அரும்பெருத் தத்துவமுதனூலாகிய சிவஞான போதத்தை வடமொழி நூலினின்று மொழிபெயர்க்கப்பட்டது என்ற தம்

பொய்க் கூற்றால் தமிழனுக்கு மாசுதேடித் தந்து சைவர்களுக்குள் பிளவையும் குழப்பத்தையும் உண்டாக்கியவர்.

அன்பே சிவமென்று சொல்லி வாழ்ந்த தமிழன் நாளடைவில்–பிற நாகரிகக் கலப்பால் பூசாரிக் கொள்கைகளுக்கும் சடங்குகளுக்கும் அடிமையாகி சமூகத்தில் பிரிவினையையும் பகைமையையும் வளர விட்டான்.

இனி நாம் செய்ய வேண்டியன:—

முதலில் சைவர்களுக்குள் சமரசமும் ஒற்றுமையும் உண்டாக வேண்டும். நந்தனார் உள்பட பல்வேறுபட்ட 63 நாயன்மார்களைக் கோவிலில் வைத்துக் கும்பிட்டுவிட்டு வாழ்க்கையில் பிறப்பாலும், சடங்குகளாலும் உயர்வு தாழ்வு காட்டும் சாதிச் சைவம் உண்மைச் சைவமாகுமா? அடுத்தபடி தமிழ் நாட்டில் சைவர்களும், வைணவர்களும் சமயக் கசப்பின்றி ஒன்றுபட வேண்டும். அதற்கடுத்த படி தமிழ் நாட்டில் நம்மால் புறக்கணிக்கப்பட்டுக் கிறிஸ்தவம் முதலிய சமயங்களைத் தழுவிய தமிழர்களையும் நம் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டும். சுருங்கச் சொல்லின் தமிழ் நாட்டில் வாழும் தமிழரெல்லோரும் ஒன்றுபட்டு வாழ வழி கோல வேண்டும். அவ்வொற்றுமை வாய்ச்சொல்லோடு நின்று விடுவதன்று. அது வடலூர் அடிகள் காட்டிய "ஆன்மநேய ஒருமைப்பாடாக மிளிர வேண்டும். இந்த நாட்டு ஒருமைப்பாடு தேசிய ஒருமைப்பாடாக வளர வேண்டும். இது உலக ஒருமைப்பாடாக மேலோங்க வேண்டும்.

அன்பர்களே! என் பேச்சில் தலைப்பாக அமைந்த பாட்டின் முதலடியில் சொல்லப்பட்ட தமிழ் இனத்தின் தொன்மையைக் கண்டோம். இரண்டாவது அடியில் சொல்லப்பட்ட அவனது தனிக் குணத்தை—பண்பாட்டைக் கண்டோம். இதைக்காண உதவியது மூன்றாமடி

---

* "சிவஞான போதம் என்ற நூலே வடமொழியின் ரௌரவாகமம் என்ற நூலில் உள்ளது என்று பலரும் பல நாளாகக் கூறி வருகிறார்கள். ஆனால் புதுச்சேரியிலுள்ள பிரெஞ்சு ஆராய்ச்சி நிலையம் இந்த ஆகமத்தைப் பதிப்பிக்கத் தொடங்கியபோது சிவஞானபோதச் சூத்திரங்கள் அதிற் காணப்படவில்லையாம்." தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்—26—10—63,

யில் சொல்லப்பட்ட அமிழ்தினுமினிய மொழியே. நான்காமடியில் சொல்லப்பட்ட "அன்பு வழி" மிக முக்யத்வமுடையது. இது தமிழில் பலவிதமாகச் சொல்லப்பட்டு வருவது.

அன்புநெறி; அருள்நெறி; நன்னெறி; நல்வழி; சிவநெறி (சிவம்—அன்பு). இந்நெறி உலகிலுள்ள எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளத் தக்கது. மிகச் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடியது.

ஐயே! யதிசுலபம்—ஆன்ம வித்தை
ஐயே! யதிசுலபம். (ஸ்ரீ ரமணர்)

இந்தச் சுலபமானவழியைப் பூசாரிக்கொள்கையர் பல படப் பிரித்தார்கள். நாலாக்கினுர்கள் (சோபனம்). ஆருக்கினுர்கள் (ஷட்தரிசனம்) முப்பத்திரண்டாக்கினுர்கள். இதற்கு மேலும், "விரிவான் பலதிறப்படும்" என்ருர்கள் (சிவஞான பாடியம்–பக்கம் 470) இந்தப் பிளவு (Hairsplitting) வழியை விட்டு விலகி, நம் பழைய வழியாகிய ஒரே வழியை, 'அன்பே சிவம்' என்னும் வழியைக் கொள்ளக் கடவோம் நாம். இவ்வழிக்கு விளக்கம் அதிகம் வேண்டியதில்லை. ஆயினும் நக்கீரர் இவ்வழியைச் செலவு என்று சொல்லி ஒரு விளக்கம் தந்திருக்கிருர்.

........................செம்மல் உள்ளமொடு
நலம்புரிகொள்கை புலம்பிரிந்து உறையும்
செலவு........................ (முருகு 63–65)

பொருள் செறிந்த சொற்கள்; சிந்தித்து, தெளிந்து ஒழுக வேண்டியவை.

அன்பு நெறியே தமிழனது "கதி" யாகும். (கதி–1 வழி; 2 மோக்ஷம்), தமிழனுக்கு மாத்திரமன்று; உலகுக்குமே!

அன்பர்களே! தொடர்ச்சியில்லாமல் உதிர்ந்த மலர்கள் சிலவற்றைச் சொரிந்தேன். குறையைப் பொறுப்பீர்களென்று நம்புகிறேன். வணக்கம்.

அன்பே சிவம்!

உ

சிவமயம்

சைவ சித்தாந்த மகா சமாஜ

59-வது ஆண்டு நிறைவு விழா

செயலாளர்

“ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே”

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அதன் அங்கமாகச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும் கோவைக்கடுத்த மேலைச் சிதம்பரம் என வழங்கப்பெறும் பேரூரில் தவத் திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் 25, 26—12—64 ஆகிய இரண்டு நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

ஆண்டு விழா நடைபெறுவதற்கு இது தக்க சூழ்நிலை யை யுடைத்தாயிருந்தது. புகழில் பேரூராகவும், அளவில் சிற்றூராகவும், புனித ஆறும், வயலும் சூழப்பெற்று இயற்கை அமைதி நிறைந்துள்ளது. புகழ் பெற்ற திருக் கோயில் ஊரின் மத்தியில் விளங்கி மக்களின் மனத்தைத் தூய்மை செய்துகொண்டே யிருக்கின்றது. கோவில் மிக வும் துப்புரவாக வைக்கப்பட்டிருக்கிறது. அம்மன் சந்நிதி யும், கூத்தப்பிரான் திருவுருவும் ஒருகால் தரிசிப்பின் எக் காலும் நெஞ்சைவிட்டு நீங்காத் தன்மைய.

சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி மிகவும் விசால மானது. அங்கு ஒரு சிறு திருக்கோயிலும் இருக்கிறது. சமாஜ உறுப்பினர்கள் தங்கியிருக்க தனித்தனி அறைகள்

ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. மாநாடு நடத்த மாடியில் பெரிய கூடம் அமைந்ததை யாவரும் விரும்பினர். சமாஜ மாநாடு நடத்த அக்கல்லூரிச் சூழ்நிலை மிகவும் பொருத்த மாக அமைந்திருந்தது.

24—12—64 மாலையே விழாத் தலைவரும் உறுப்பினர் களும் மாநாடு நடைபெறும் கல்லூரிக்கு வந்து சேர்ந்தனர். 25—12—64 காலை மற்றத் தலைவர்களும், சொற்பொழி வாளர்களும், உறுப்பினர்களும் சென்னையிலிருந்தும் சுற்று வட்டாரங்களிலிருந்தும் வந்து சேர்ந்தனர். கல்லூரி மாண வர்களும், ஆசிரியர்களும் சமாஜ விழா வரவேற்புக் குழுவின் சார்பில் சின்னங்களணிந்து விழாவிற்கு வருவோரை அழைத்துச் சென்றனர்.

25—12—64 காலை மாநாட்டிற்கு வந்திருந்த அனைவ ரும் பேரூர் கோயிலுக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பெற்றனர். பொன் முகபடாம் அணிந்த கோவில் யானை கம்பீரமாக மணியோசையுடன் முன்செல்ல, வாத்தியகுழாம் பின் செல்ல, மாணவ மாணவிகள் அங்கியணிந்து தொண் டர் படையாக அதற்குப் பின் செல்ல, தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும், அன்பர்களும், சமாஜச் சின்னமணிந்து அணிவகுத்துச் சென்ற ஊர்வலக் காட்சி கண்கொளாக் காட்சியாகும். கோயில் வழிபாடு செய்து கல்லூரிக்குத் திரும்பி வந்ததும், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் மறை. திருநாவுக்கரசு அவர்கள் ஏற்றுக் கொடியை ஏற்றினார்கள். பின் கல்லூரி மாடியி லுள்ள கூடத்தில் மாநாடு கூடிற்று.

கடவுள் வாழ்த்துடன் மாநாடு தொடங்கிற்று. திரு. நா. மகாலிங்கம் B.Sc. M. L. A. அவர்கள் முதற்கண் புய லினால் பாதிக்கப்பட்ட தனுஷ்கோடி, இராமேஸ்வரம் மக்க ளுக்கு மாநாட்டின் அனுதாபத்தைத் தெரிவித்தார்கள். யாவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக நின்று அனுதா பம் தெரிவித்தனர். பின் திரு. நா. மகாலிங்கம் அவர்கள்

தமது வரவேற்புரையில் சைவ சமயத்தைப் பற்றி மக்களிடையே தெளிவான கருத்துகள் இல்லை எனவும் சைவ சமய, சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பொதுமக்களிடையே பரப்ப வேண்டிய கடப்பாடு சமாஜத்திற்கு உரியது எனவும் கூறினார்கள்.

பின் கொடியேற்றி வைத்த திரு. மறை திருநாவுக்கரசு அவர்கள் (மறைமலையடிகள் திருமகனார்) சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தோற்றம், வரலாறு ஆகியவற்றைக் கூறி ஏற்றுயர் கொடியின் தத்துவப் பொருளை விளக்கினார்கள். பின் சமாஜச் செயலாளர் ஆண்டு அறிக்கையை வாசித்தார். (சென்ற மாத இதழில் வெளிவந்துள்ளது) தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் தங்கள் வாழ்த்துச் செய்தியுடன் ஆதீனத் தமிழ்ப் புலவர் சித்தாந்தக் கலைமணி வித்துவான் திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்களை அனுப்பியிருந்தார்கள். அன்னார் சந்நிதானத்தின் வாழ்த்துரையை வாசித்தார்கள். தருமையாதீனம் இலவசமாக வழங்க "திருவெம்பாவை—திருப்பள்ளி யெழுச்சி" 'சந்தானசாரியார் புராணம்' நூல்களை அனுப்பியிருந்தது. ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், முதல் அமைச்சர் திரு. M. பக்தவத்சலம், இந்திய அரசாங்க உணவு அமைச்சர் திரு. C. சுப்பிரமணியம், திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், மதுரை ஆதீனம், Dr. B. நடராஜன் M. L. A. கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரித் துணைத் தலைவர் வித்துவான் திரு. அடிகளாசிரியர் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற வாழ்த்துச் செய்திகளைச் செயலாளர் வாசித்தார்.

பின் திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தமக்கே உரிய உணர்ச்சியோடு திறப்புரை நிகழ்த்தினார்கள். அவர் கூறியதின் சாரம்:—சைவம் அன்பின் அடிப்படையையுடையது. அவ்வன்பு, தொண்டில் பரிணமிக்க வேண்டும்; நாவுக்கரசரின் உழவாரப்படை தொண்டின் அறிகுறி; சமாஜம் ஆலயங்களைத் துப்புரவு செய்வது முதலான கைத்தொண்டில் ஈடுபட வேண்டும் என்பனவாகும்,

பிறகு சேக்கிழார் திருவுருவப் படத்தை திரு. பண்டித அ. கந்தசாமி பிள்ளையவர்களும் சாந்தலிங்க சுவாமிகள் திருவுருவப்படத்தை கவியரசு திரு. கு. நடேச கவுண்டர் அவர்களும் அப்பெரியார்களின் பெருமைகளை விளக்கிக் கூறித் திறந்து வைத்தார்கள்.

பின் விழாத்தலைவர் பழையம்பதி திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்கள் B. A. தலைமையுரை யாற்றினார்கள். (இவ்விதழிலேயே பிறிதோரிடத்தில் காண்கவும்) இதனுடன் அன்றைய காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

உணவிற்குப் பின் பிற்பகல் சைவ இளைஞர்கள் கருத்தரங்கு கூடியது. இக்கருத்தரங்கை ஈரோடு திரு. S. மீனாட்சி சுந்தரம் B. A., L. T. அவர்கள் தொடங்கி ஓர் அழகிய சொற்பொழிவு ஆற்றினார்கள். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஈழத்திலிருந்தும் மாணவர்களும் ஆசிரியர்களும் பிற துறையிலீடுபட்டவர்களுமாக ஏறத்தாழ 150 இளைஞர்கள் இக்கருத்தரங்கில் பங்கு கொண்டனர். இவர்கள் எட்டு உட்குழுக்களாகப் பிரிந்து எண்பொருள்களைப்பற்றி விவாதித்தனர். இவ்விவாதம் மறுநாளும் தொடர்ந்து நடைபெற்றது.

முதல் நாள் மாலை 5-மணிக்குச் சைவர் மாநாடு தலைவர் திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. கவியரசு திரு. கு. நடேச கவுண்டர் அவர்கள் "சிவமாந் தன்மை பெறும்வழி" என்பது பற்றியும், திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T. அவர்கள் "அத்துவித மெய்கண்ட நாதன்" என்பது பற்றியும், திரு. பூ. ஆலால சுந்தரம் செட்டியார் M. A. அவர்கள் "சைவ சமய வளர்ச்சி" என்பது பற்றியும் திரு. மு. அருணாசலம் M. A. அவர்கள் "நாயன்மாரும் 20 ஆம் நூற்றாண்டும்" என்பது பற்றியும் பொருள்செறிந்த அழகிய சொற்பொழிவுகள் ஆற்றினர். தலைவர் முடிவுரையுடன் அன்றைய நிகழ்ச்சி முடிவடைந்தது.

இரவு உணவிற்குப் பின் கல்லூரி மாணவிகள், மாணவர்கள் முறையே 'திருவெம்பாவை'', ''நறுமாங்கனி'' என்னும் நாடகங்களை அழகுற நடித்துக் காட்டினார்கள்.

மறுநாள் (26—12—'64) காலை 8 மணிக்கு சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் கூடிற்று. இக்கூட்டத்தில் முதற்கண் சமாஜப் பணியாளர்கள் தேர்வு நிகழ்ந்தது. (தேர்ந்தெடுத்த பணியாளர்கள் பட்டியல் சென்ற மாத இதழில் வெளிவந்துள்ளது.) பின் திரு. K. A. நீலகண்ட சாத்திரியார் அவர்கள் சில காலமாகத் தமிழர் பண்பாட்டிற்கும் சைவ சமயத்திற்கும் குறைவு கற்பிக்கும் வகையில் வெளியிட்டுவரும் பிழைபட்ட கருத்துக்களைக் கண்டிப்பதாகவும் இவ்வகையில் அவர் பிழைபட்ட கருத்துக்களை கண்டிக்கவும் சைவ சமய சாத்திர வரலாற்றுண்மை மக்களுக்கு நன்குய் விளங்கவும் ஒரு கண்டன நூல் சமாஜம் வெளியிட வேண்டும் என்பதாகவும் இப்பொதுக் கூட்டம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. (இத்தீர்மானம் சென்ற மாத இதழில் வெளிவந்துள்ளது.)

பிறகு 9-30 மணிக்குச் சைவ மங்கையர் மாநாடு தொடங்கியது. இம்மாநாட்டிற்குச் சேலம், திருமதி காமாட்சி குமாரசாமி M. A. அவர்கள் தலைமை வகித்தார்கள். ஈரோடு திருமதி செல்லம் சண்முக சுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். பழையகோட்டை திருமதி பார்வதி அருச்சுனன் M. L. A. அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். பின் மங்கையர் மாநாட்டிற்குத் தலைவர் பொருட் செறிவும் நகைச் சுவையும் நிறைந்த தலைமையுரையை ஆற்றினார்கள். பின்திருமதி ந. சுப்புலட்சுமி எம். ஏ. அவர்கள் ''பெரிய புராணத்தில் பெண்டிர்'' என்பது பற்றியும் திருமதி ந. சரோஜினி தேவியார் எம்.ஏ. அவர்கள் 'சிவநெறியில் பெண்கள் அன்றும் இன்றும்'' என்பது பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

பிற்பகல் 3 மணிக்குக் கருத்தரங்கும் இளைஞர்மாநாடும் கூடின. தவத்திரு. சுந்தரம் அடிகளார் அவர்கள் வாழ்த்து

ரையும் நம் சமய மேம்பாட்டில் இளைஞர்கள் கொள்ள வேண்டிய இலக்கம் குறித்த அறிவுரையும் வழங்கினார்கள். பின்னர் திருச்சி திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜ பிள்ளை B. A., அவர்கள் தலைமையுரை ஆற்றினார்கள். (தலைமையுரை சென்ற மாத இதழில் வெளிவந்துள்ளது) கீழ்க்காணும் கருத்தரங்குக் குழுத் தலைவர்கள் தங்கள் முடிவுகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

திரு. ந. இரா. முருகவேள் M. A., M. O. L., சென்னை.
,, கு. வேங்கடாசலம் B A., M. Ed., பொள்ளாச்சி
,, ம. ரா. போ. குருசாமி M. A. கோவை.
,, அரங்கசாமி M. A., கோவை.
,, க. மீனாட்சி சுந்தரம் M. A., M. Litt, கோவை.
,, சு. வெங்கடராமன் B. A. B. L. கோவை
,, கவிஞர் காந்திதாசன், கோவை
,, ஈசுவரமூர்த்தி M. A. (oxon) கோவை

திரு நல். முருகேச முதலியார் அவர்களும் மற்றும் சில பெரியோர்களும் இளைஞர் மாநாட்டின் சார்பில் நிகழ்ந்த கருத்தரங்கினைப் புகழ்ந்தும் இளைஞர்கள் செயல்பட வேண்டிய இன்றியமையாமை குறித்தும் தங்கள் கருத்துகளைப் புகன்று வாழ்த்தினர்.

தவத்திரு. இராமசாமி அடிகள் அவர்களும் சமாஜத் தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். (ஓய்வு) அவர்களும் சமாஜ மாநாடு சிறப்புற நிகழ ஏற்பட்ட சூழ்நிலைகளை எடுத்துக் கூறியதுடன் ஆண்டு விழாவில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினர்.

இரவு 8-30 மணிக்குச் சாந்தலிங்கர் உயர்நிலை, உயர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தினர்.

இவ்வாண்டு சமாஜ ஆண்டுவிழாவும் மாநாடுகளும் பல வகைகளில் தனிச்சிறப்பு பெற்று விளங்கின. விழாத் தலைவரும் சைவர் மாநாட்டுத் தலைவருமான இராவ்பகதூர்

திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்கள் சமாஜத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்கள். 1946 முதல் 1953 வரை ஏழு ஆண்டுகள் சமாஜச் செயலாளராகப் பணி புரிந்தவர்கள். தந்தை சைவர் மாநாட்டுத் தலைவராகவும் மகள் மங்கையர் மாநாட்டுத் தலைவராகவும் அமைந்த பெருமை இவ்வாண்டிற்குரிய தனிச்சிறப்பு.

நம் சமாஜ ஆண்டு விழா மூன்று நாள்கள் நடப்பது வழக்கம். இவ்யாண்டு உணவுப் பற்றாக்குறை, விலைவாசிகள் ஏற்றம் முதலிய சூழ்நிலைகளைக் கருதி கால நிலைக்கேற்ப இரண்டு நாள்களில் நிகழ்ந்தது. ஆனால் மூன்று நாள்களில் நடைபெறக் கூடிய நிகழ்ச்சிகளும் மேலும் கருத்தரங்கு என்ற புதியதொரு நிகழ்ச்சியும் இவ்விரண்டுநாள்களிலேயே நிகழ்ந்தேறின. இளைஞர் கருத்தரங்கு இவ்யாண்டு விழாவிற்குப் புதியதொரு உணர்ச்சி வேகத்தைக் கொடுத்தது, இவ்வாண்டு விழா சிறப்பாக நடைபெறுதற்குத் துணை புரிந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை மறத்தல் ஒண்ணாது. இவ்விழாவில் கலந்து சிறந்த வாழ்த்துரை வழங்கப் புறப்பட்டு வந்த அடிகளார் அவர்களைப் புயல் தோற்றம் வரவிடாமல் தடைசெய்தது. அவ்வடிகளாருக்கும் வரவேற்புக்குழு அமைப்பாளராகிய திரு. நா. மகாலிங்கம் எம். எல். ஏ. அவர்கள், தவத்திரு. இராமசாமி அடிகள், தவத்திரு சுந்தரம் அடிகள் ஆகியோர்களுக்கும் மற்றைய வரவேற்புக்குழு உறுப்பினர் அனைவருக்கும் கல்லூரி, மற்ற கலை நிலையங்களிலுள்ள மாணவ மாணவியர்களடங்கிய தொண்டர் குழாங்களுக்கும் பிறபணிகளாலுதவிய யாவருக்கும் சமாஜத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் யாவருக்கும் கூத்தப்பிரான் திருவருள் பாலிப்பாருக.

வாழ்க உலகெலாம்!

சைவம் கண் திறக்க

—(ஆசிரியர்)—

சமீபத்தில் டிசம்பர் 2—4 தேதிகளில் பம்பாயில் அகில உலகக் கத்தோலிக்க நற்பிரசாத மகாநாடு நடந்தது. அதில் ரோமாபுரி மத குருவாகிய போப் கலந்து கொண்டு நற்பிரசாதம் வழங்கினர். வழங்கியபோது அவர் பேசிய சொற்களில் பின்வரும் பகுதி குறிப்பிடத்தக்கது.

"ஆண்டவனே! அசத்தியத்திலிருந்து என்னைச்சத்தியத்தில் செலுத்துவாயாக. இருளிலிருந்து ஒளியில் செலுத்துவாயாக. அழிவிலிருந்து அழியாமையில் செலுத்துவாயாக" என்பது ஹிந்து வேதங்கள் கூறும் பிரார்த்தனை. இப்பிரார்த்தனை என்றையும்விட இன்று எல்லா இதயங்களிலிருந்தும் எழ வேண்டும். மக்களினங்களில் பெருத்த மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன. மக்கள் வழி காட்டும் நியதிகளை உணராமல் தத்தளிக்கிருர்கள்..." என்று அவர் கூறினர். அவர் காட்டிய மேற்கோள் பிருஹதாரணியக உபநிஷதத்தில் வந்துள்ளது. இந்திய மக்களிடையே பேசுகையில் உலகத்துக்கு உய்தி காட்டும் தத்துவங்களாக அவர் வேதத்தை எடுத்துச் சொல்கிருர். இது அவருடைய பரந்த மனப்பான்மையையும் உண்மையையே நாடும் ஆவலையும் இடத்திற்கு ஏற்றவாறு தம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ளும்பண்பையும் காட்டுகிறது.

சைவ மக்கள் இதனை ஓர் எடுத்துக்காட்டாகக் கருத வேண்டும். நாம் நாற்புறமும மதில் எழுப்பிய கோட்டைக்குள் வாயிலைத் தாளிட்டுக்கொண்டு வாழவில்லை; அப்படி யாரும் இன்று வாழவும் முடியாது. கணக்கற்ற தாழ்வுச் சக்திகள் எந்நேரமும் மோதுகின்ற உலகில் வாழ்கின்ருேம். இதில் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வழி, பிறரை நன்ருய்ப்புரிந்துகொண்டு அவரவர் மதங்களில் காணும் சிறப்புக்கள் அனைத்தையும் நம்மவையாக்கிக்கொண்டு வாழுதல,

சைவராயுள்ளோர் முதலாவதாகத் தங்கள் சமயத்தின் செம்மையான கருத்துக்களை உணர்வார்களாக. பர பக்கமே பேசுதல், மாயாவாத தூஷணம் செய்தல் போன்றவை இன்றைக்குத் தேவையானவை அல்ல. சைவர் சைவ நெறியில் நிற்க வேண்டும். தினசரி வாழ்க்கையில் சைவ ஒழுக்கம் கமழ வேண்டும்.

பின்னர் வைணவம் அறிதல் அவசியம். சிறப்பாக நாலாயிரப் பிரபந்தம் நன்கு அறிதல் வேண்டும். வைணவர்கள் வட மொழியினும் தமிழுக்குத் தந்திருக்கும் சிறப்பு சைவம் ஒருகாலும் தந்ததில்லை. நாலாயிரம் மட்டும் அன்றி, இராமானுச நூற்றந்தாதி, சடகோபரந்தாதி, திருவரங்கக் கலம்பகம் போன்ற பாடல்கள் தமிழனை இன்ப வெறி கொள்ளச் செய்வன. இவற்றையும் சைவர் நன்கு பயில்வார்களாக.

இனி நம் வாழ்நாளை யொட்டி இந்து மதத்திற்கே புத்துயிர் அளித்தவர்கள் ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், மகாத்மா காந்தி ஆகியோர். அவர்களுடைய உபதேச மொழிகளைச் சைவர் உணரவேண்டும். இவை சைவத்துக்கு அன்னியம் என்று எண்ணலாகாது. தங்கள் வாழ்க்கையை நடத்திய பெரிய சக்தி கீதை என்று திலகர், காந்தி, வினோபா ஆகியோர் பன்முறை கூறியிருக்கிறார்கள். அந்த சக்தியைச் சைவர் ஒவ்வொருவரும் தம் வாழ்வில் உணர்தல் வேண்டும். விவேகானந்தர் பிரசாரம் செய்து வந்த செயல் முறை வேதாந்தம் சைவத்தைப் பெரும்பாலும் ஒட்டியது.

இந்த நூற்றுண்டின் தவயோகியாக அரவிந்தர் புதுச்சேரியில் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். அவர் இந்திய சுயராஜ்யப் போரில் ஆரம்ப காலத்தில் பெரும் பங்கு கொண்டிருந்தார். அவருடைய உபதேசங்களைக் கற்றறிந்த வங்காளிகள், தமிழர் பலர் தங்கள் அனைத்தையும் துறந்தார்கள். அப்பெரியாரின் உபதேசங்களையும் சைவர் உணர வேண்டும். இவை யாவும் சைவத்துக்கு அரண் செய்வன என்ற ஞானம் பிறக்க வேண்டும்.

சைவனும் இந்தியனே என்ற உணர்வு வேண்டும். நம் சிந்தனை, செயல், சொல் யாவும் பிறரையும், நம்மையும் சேர்த்துப் பிணிக்க உதவ வேண்டும். பிளவு சக்திகளைக் களைய வேண்டும். இதன் பொருள் சைவ சித்தாந்தத்துக்குத் தனிக் கோட்பாடு இல்லை என்பதன்று; இது அனைத்தையும் தழுவித் தன்மயமாக்க வல்லது என்பதாகும்.

பொன் மொழிகள்

"நாம் அக்கரை காட்டும் பொதுக் காரியங்களை நாளுக்கு நாள் விரிவுபடுத்தி, அவைகளில் தன்முனைப் பின்றி ஈடுபட்டால் நம்மைச் சிறைப் படுத்தும் 'தான்' என்னும் சுவர்கள் மெள்ள மெள்ளத்தகர்ந்து முடிவில்நம் வாழ்க்கை அகண்ட வாழ்க்கையில் ஒன்றிவிடும். ஒருதனி மனிதனின் வாழ்க்கை ஒரு நதிபோன்றியங்க வேண்டும். நதி முதலில் குறுகியதாகவும், இரு கரைகளினுள்ளே அடங்கியும், கற்பாறைகளின்மீது பாய்ந்தும், பள்ளங்களில் குதித்தும், வேகமாகச் செல்லும். பின், நதி அகன்று இரு கரைகளும் இல்லையாங்கு விலகி அமைதியாக நகர்ந்து முடிவில் மாறுதல் ஒன்றின்றியே கடலில் ஒன்றித் தன் தனித் தன்மையை விட்டு விடுகிறது."

—பர்ட்ரண்ட் ரஸ்ஸல்.

உயிர் சிவத்தோடு அணைவதன் முன் சிவமாந் தன்மையைப் பெறுகிறது. 'சிவமாக்கி எனை ஆண்ட அந்தமிலா ஆனந்தம்' என்ற கருத்தை நோக்குக.

—கொ. நீ. சி.

சமயநெறி கருத்தரங்கு

இளைஞர்களிடையே சமயஉணர்வு வளரத்திருமடங்கள் செய்ய வேண்டியன.

திரு. பொ. ரங்கசாமி, எம்.ஏ., பி.டி., பேராசிரியர்,
விரிவுப்பணி-வித்தியாலய கிராமியக் கல்லூரி.

நமது மடங்கள் சிறந்த சமய வாழ்க்கைக்கு நிலைக்களனாகவும், சான்றாகவும் அமைதல் வேண்டும். திருமடங்களில் வாழும் அனைவரும் அப்பழுக்கில்லாத தூயஒழுக்கம் வாய்ந்தவர்களாகவும், அருளுணர்வு நிரம்பப் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மடங்களின் முக்கியமான பயனே சத் சங்கம்தான். (பெரியோர்கள் உறவு) இல்லறத்தில் வாழ்பவரும், இளைஞர்களும் அவ்வப்போது மடங்களுக்குச் சென்று, சிலநாள் தங்கி அங்குள்ள துறவிகளின் கூட்டுறவில் வாழ்ந்தால் அவர்கள் மனம் சஞ்சலம் நீங்கி, தெளிவும் சாந்தியும் பெறும், அத்தகைய சத் சங்கத்தை அளிக்குமிடங்களாக நமது மடங்கள் அமைய வேண்டும். நமதுமடங்கள் ஆங்காங்கேபெரியோர்களைக்கொண்டு சமய வகுப்புக்களும், கருத்தரங்குகளும், இளைஞர் முகாம்களும் நடத்தலாம். அவற்றில் வெறும் பேச்சுக்களுடன் நில்லாமல் வழிபாடு, தியானம் முதலிய அடிப்படையான ஆன்மீக சாதனைகளில் பயிற்சி அளிக்க வேண்டும்.

சமய விழாக்களில் கதா காலட்சேபம், நாடகம், வில்லுப் பாட்டு, நடனம் முதலிய கலைநிகழ்ச்சிகள் மூலம் சமயப் பிரச்சாரம் செய்யலாம். அடியார்களின் வரலாறுகளை இம்முறைகளில் விளக்கிக் கூறலாம். கலைஞர்கள் கலைத்திறனுடன் தெய்வ உணர்வும் நிறைந்தவர்களாக இருக்க வேண்டும்.

நமது மடங்கள் சமய சமரச உணர்ச்சியைவளர்ப்பனவாக இருத்தல் இன்றியமையாதது, குறுகிய மதப் பிரிவுகளும் பூசல்களும் இக்காலத்திற்கு ஒவ்வா. சமய வேறுபாடுகள், சடங்குகளில் அதிகக் கவனம் செலுத்தாமல் அவற்றில் அடிப்படை ஒற்றுமையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு மடத்திலும் எல்லாச் சமய நூல்களும் கொண்ட சிறந்த நூலகம் ஒன்று இருக்க வேண்டும். சமயச் சார்புள்ள எல்லாப்பத்திரிகைகளும் இடம்பெறலாம். பொதுமக்கள் தாராளமாகப் பயன்படுத்தும் முறையில் இவை அமைய வேண்டும்.

சமய நூல்களை எளிய உரையுடன் பொதுமக்கள் பதிப்பாகக் குறைந்த விலையில் திருமடங்கள் வெளியிட வேண்டும்

பொது மக்களுக்கும் மடங்களுக்கும் நெருங்கிய தொடர்பு தேவை. தினசரி பஜனை, வழிபாடு முதலிய நிகழ்ச்சிகள் நடத்தலாம்.

கல்லூரி, பள்ளி மாணவர்களிடையேசமய அறிவைப் பயக்கும் வகையில் அவர்களுக்குக் கட்டுரை, பேச்சு, கவிதை, நாடகம் முதலியவற்றில் போட்டிகள் வைத்து நடத்தலாம்.

திருமடங்களும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், கிறிஸ்தவ மிஷனரிகள்போல் சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டும். சான்றாக பள்ளிகள், மருத்துவ மனைகள் போன்றன.

தலவிருக்ஷ ஆராய்ச்சி

டாக்டர் B. G. L. சுவாமி M. A. Phd. (முதல்வர், சென்னை மாநிலக் கல்லூரி) தல விருக்ஷங்களைப் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்து வருகிறார். அதைப் பற்றிய அரிய தகவல்களிருந்தால், அவருக்காவது நல்—முருகேச முதலியாருக்காவது எழுதி அனுப்பக்கோரப்படுகிறது. டாக்டர் சுவாமி அமெரிக்கா, சிக்காகோ மியூசியம் காப்பாளரும் சிறந்த அறிஞருமான டாக்டர் ஆனந்த குமாரசாமியுடன் அவர் உயிருடனிருந்தபோது தொடர்பு கொண்டிருந்தார். டாக்டர் ஆனந்த குமாரசுவாமி திரு. J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள் நூல்களில் மிக்க மதிப்புக் கொண்டிருந்ததாக அவர் கூறுகிறார்.

திரு. அ. சோமசுந்தரம் செட்டியார்

80-ஆம் ஆண்டு நிறைவு

[மு. அ.]

ஜனவரி மாதம் 11–ஆம் தேதி சைவ சித்தாந்த சமாஜத்தின் பேரன்பரும், பலமுறை தலைவரும், உபதலைவருமாயிருந்த திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களுக்கு 80 ஆண்டு பூர்த்தி ஆயிற்று. சமாஜச் சார்பில் அவர்களுக்கு உபதலைவரும், சமாஜ அமைச்சரும் மாலை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

செட்டியார் அவர்கள், அண்ணாமலைச் செட்டியார், ருக்மணி அம்மாள் புதல்வராக 1885–இல் பிறந்தார். உடன்பிறந்தார் பலருள்ள பெரிய குடும்பம். இளமை முதல் தெய்வபக்தி நிறைந்த சூழ்நிலையில் பழகினார், இளமையில் வகுப்பில் முதல் மாணவராகத் தேறிவந்து எம். ஏ., பட்டம் பெற்றார். காகினடா கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

இவருடைய மனம் யந்திர நுட்பத்தில் ஈடுபடக்கூடிய மனம். இத்துறையில் மனம் சென்றபோது இவர் சொற்ப அளவு தீயைப் பயன்படுத்தி ஏககாலத்தில் சாதத்தையும் இரண்டொரு கறிவகைகளையும் வேகவைக்கவல்ல சமையல் அடுக்குப் பாத்திரம் ஒன்றை அமைத்து, அதற்கு 'ருக்மணி குக்கர்' என்று தம் அன்னையார் பெயரை வைத்தார். இதைப் பின்பற்றி இந்தியாவில் பலவகையான குக்கர்கள் ஏற்பட்டிருந்தன ; பல வழக்கு வீழ்ந்தன. இது ஒன்றே இன்று நம் நாடெங்கும் பயன்பட்டு வருகிறது. இரண்டுபேர் முதல் அனேகம் பேர்வரையில் உண்பதற்கு ஏற்றவகையில் இப்பாத்திர வரிசைகள் உள்ளன. ஈயம் பூசின பித்தளைப் பாத்திரத்திலிருந்து எவர்சில்வர் பாத்திரம் வரையில் இதுகாலத்துக்கு ஏற்றவகையில் மாறியும் வந்திருக்கிறது. இதைப் பயன்படுத்திப் பழக்கப்பட்டவர்கள் இது எவ்வளவு எளிமையானது, எவ்வளவு பயனுள்ளது என்பதை நன்கு அறிவார்கள்.

இந்தக் குக்கருக்குத் தேவை அதிகம் ஏற்பட்டபின் பினால் இவர் தம் பேராசிரியர் பதவியை விட்டு விலகி இத் தொழில் துறையிலேயே தங்கி விட்டார். இத் தொழிலில் ஒவ்வொரு சிறு அங்கமும் கூட இவருடைய நேர்பார்வையி லேயே நடைபெற்று வருகிறது.

சிவபக்தி மிகுந்தவரான திரு. செட்டியார் இந்தத் தொழில் மூலம் தமக்குக் கிடைத்த பெரும் வருவாயைத் தருமத்துக்குப் பயன்படுத்தி யிருக்கிறார். சிவபக்தி நிறைந் தவர் ஆனமையால் சைவ சமய வளர்ச்சிக்கு, இவர் பேரு தவி செய்திருக்கிறார். சமாஜத் திருமுறை வெளியீடுகளுக் குப் பொருளுதவி செய்ததோடு, பலமுறை சுந்தரர் தேவா ரம், திருவாசகம் போன்றவற்றைத் தாமே குறிப்புரையும் எழுதி அடக்க விலைக்கு வெளியிட்டிருப்பது சமாஜ அன்பர் கள் அனைவரும் அறிந்த செய்தி. சுந்தரர் தேவாரத்தில் இவருக்கு விசேஷ ஈடுபாடு.

இவர் செய்கின்ற தருமங்கள் பிறருக்குச் சொல்லாமல் செய்தவை. பிறருடைய பாராட்டுதலைச் சிறிதும் விரும்ப மாட்டார். சேக்கிழார் கோயில் கட்டவும், சைவ சித்தாந்த சமாஜக் கட்டிடத்துக்கும், திருவல்லம், திருக்கழுக்குன்றம், அப்பர் சுவாமிகள் மடம், திருவாலங்காடு முதலிய இடங்க ளில் திருப்பணிகளுக்கும், கோவூர் உயர்நிலைப் பள்ளி, வணிக வைசிய சங்கம் முதலியவற்றுக்கும் இவர் செய் துள்ள தருமங்கள் லட்ச ரூபாய்க்கு மேற்பட்டவை. எல்லாவற்றிலும் சிறப்பானது இவருக்குத் திருமுறைகளி லுள்ள சிறப்பான பயிற்சி. இவர் திருமுறைக் காவலர் என்னும் பட்டமும் பெற்றவர். இவருடைய திருமுறைப் புலமை ஆச்சரியகரமானது. எல்லாரும் தேவாரம் பாட வேண்டும். முக்கியமாகப் பள்ளியில் படிக்கும் பிள்ளைகள் அனைவரும் தேவாரம் இசையோடு பாட வேண்டும் என்ப தில் இவருக்குள்ள ஆவல் அளவில்லாதது. சென்னை முதல் திருநெல்வேலிவரையில் தேவார ஆசிரியர்களை ஏற்படுத்தி நூற்றுக் கணக்கான ரூபாய் செலவு செய்து பள்ளிகளிலும்

ஆலயங்களிலும் தேவாரப் பயிற்சிக்கு விரிவான ஏற்பாடுகள் செய்திருக்கிறார். இவர் செய்த இப்படிப்பட்ட ஏற்பாடுகள் பிறருக்குத் தெரியமாட்டா. செல்வர்கள் இவர் போன்ற தருமம் செய்பவர்களாக ஜில்லாவுக்கு ஒருவர் இருப்பார்க ளானல் திருமுறை அறிவு தமிழ் நாட்டில் எவ்வளவோ முன்னேறி யிருக்கும்.

இப்பெரியார் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து சைவ சமயத்தையும், திருமுறைகளையும் நன்கு வளர்க்க ஆண்ட வன் இவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும், நீண்ட ஆயுளை யும் அருளப் பிரார்த்திக்கிறோம்.

"பல்லாண்டு, பல்லாண்டு, பல்கோடி நூறாயிரம்" என வாழ்த்துகிறோம்.

திருமணங்கள்

நம் சமாஜத் துணைத்தலைவர் திரு. தி. கி. நாராயண சாமி நாயுடு அவர்கள் இரண்டாவது மகள் திருமதி கமலா வுக்கும், மாறனேரி திரு. கோபால்சாமி நாயுடு அவர்கள் செல்வர் திரு. சீனுவாசனுக்கும் மதுரையில் 20—1—65 அன்று திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. சமாஜத்தார் தனி வாழ்த்துப்பாவொன்றும் வாசித்தளித்து மணமக்களை வாழ்த்தினர். புது மணமக்கள் எல்லா நற்பேறுகளுமினி துற்றுச் சைவமும் தமிழும்தழைத் தினிதோங்க நற்பணி செய்து சிறந்து வாழ அருள் பாலிக்குமாறு ஆலவாயண் ணல் அடியிணை மலர்களை இறைஞ்சுகின்றோம்.

(துணையாசிரியர்)

நம்சைவப்பெரியார் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் இளவல் திரு. ச. நித்தியானந்தம் பிள்ளையவர்கள் மகனார் திரு. நம்பியாண்டார் நம்பிக்கும் திரு கன்னிப் பிள்ளையவர் கள் மகளார் திருமதி. இராசேசுவரிக்கும் மயிலைக் கபாலீச் சுரத்தில் 7—2—65 அன்று திருமணம் நிகழ்ந்தது. புது மணமக்கள் பகரருபேறுகள் பலவும் பெற்றுப் பரமனருளால் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க.

நம் சமாஜ உறுப்பினர் மயிலை திரு. S. பாலசுப்பிர மணிய முதலியார் அவர்கள் அருமை மகனார் திரு. P.B.பரம சிவன் (பொறியர்) அவர்கட்கும், செல்வமலி குன்றத்தூர் திரு. T.K M. சபாபதி முதலியார் அவர்கள் மகளார் திருமதி குமுதவல்லிக்கும் தி. நகர் சுகுணவிகாரில் 7—2—65ல் சிறப்புறத் திருமணம் நிகழ்ந்தது. மணமக்கள் எல்லாப் பேறுகளுமினிதுற்று இறையருள் பெற்று நீடுவாழ்க.

பிலிப்பைபன்ஸ்தீவில் சித்தாந்த விரிவுரை

பிலிப்பைன்ஸ் தீவில் தூமகேத நகரில் (Dumaguete city) சல்லிமான் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ இளைஞர் மாநாடு நிகழ்ந்தது. மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் சித்தாந்த விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். அவர்கள் கடிதத்தின் ஒரு பகுதியைச் சித்தாந்த அன்பர்களுக்கு அப்படியே தருகின்றோம். "இங்கு சல்லிமான் பல்கலைக்கழகத்தில் இந்த இளைஞர் மாநாடு நடைபெறுகிறது. இளைஞர்கள் 600; தலைவர்கள் 100; இந்து நேசியா, கொரியா, பிலிப்பைன்ஸ் ஒவ்வொரு தேசமும் 60க்குக் குறையாமல்; இந்தியா, ஆஸ்திரேலியா—ஒவ்வொன்றும் 50க்கு மேல்; மற்ற தேசங்கள் குறைவு. மொத்தம் 18 தேசங்கள் கலந்து கொண்டன. நான் ஒருவன்தான் கிறித்தவனல்லாதவன். பிரதிநிதிகளில் படித்தவர்கள் அதிகம். Doctor of Divinity, பாதிரிமார்கள், கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் பெரும்பாலோர். என்பிரசங்கம் 45நிமிஷம்: உட்கார்ந்து படித்தேன். எல்லாருக்கும் பரமசந்தோஷம்; பலத்த கரகோஷம்; பலர்வந்து பாராட்டினர். பல விஷயங்களைக் கேட்டனர். இக்கூட்டத்தை ஐந்து பிரிவுகளாக்கி ஒவ்வொரு பிரிவையும் தனியாகச் சந்தித்துக்கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறேன். அப்படி மூன்று வகுப்புகள் முடிந்து விட்டன. இன்னும் இரண்டு இரண்டொரு நாளில் நடைபெறும். சித்தாந்தத்தை எளிய முறையில் சொன்னால் கேட்க ஆசைப்படுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். சொல்லவேண்டியது அவசியம். எனக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். சைவ உணவு கிடைக்கிறது. என்பேச்சுக்கு எவ்வளவு விளம்பரம் கிடைத்ததோ அதற்குச் சரி சமமான விளம்பரம் சந்தனப்பொட்டிற்கும் சைவ உணவிற்கும் கிடைத்தது. என்றால் பலரும் கைகூப்பி வணங்கும் பழக்கத்தைப் பழகிக் கொண்டனர்.

கா. இராமநாதன்,
3—1—1965.

சொல் – பொருள் பிரச்சினை (நல். மு.)

இந்தியா சர்வதேச நிலயத்தின் சென்னைப் பல்கலைக் கழகப் பிரிவின் சார்பில் 30—1—65 அன்று "சொல் —பொருள் பிரச்சினை" என்பதைப் பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. துணைவேந்தர் டாக்டர்-இலக்குமணசுவாமி முதலியார் தொடங்கி வைத்தார். டாக்டர். கோவிந்த ராஜுலு நாயுடு தலைமை வகித்தார். பல பேராசிரியர்கள் எடுத்துக்கொண்ட பொருளாகிய (The Problem of Meaning) என்பதைப் பற்றிக் கருத்துரைகள் படித்தார்கள். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பேசுகையில் சொல் மூலத்தினாலோ, அமைப்பினாலோ மட்டும் அதன் பொருள் விளங்குவதில்லை. அது குறிக்கும் பொருள், இலக்கணத்தில் மட்டும் வரையறுக்க முடியாது. அதை வடமொழியில் 'ஸ்போடா' (Sptote) என்பார்கள். வட நூலாசிரியரான பர்த்ருஹரிதான் முதன் முதலாக மொழிகளின் பொருள் தத்துவத்தைப் பற்றி ஆராய்ந்தவர். அவர் கூற்றுகளைத் தற்கால மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் முற்றும் ஒத்துக்கொள்ளாவிடினும் கற்க வேண்டியது நன்று. சைவ சித்தாந்தத்தில் இந்த 'ஸ்போடா' முக்கிய இடம் பெறுகிறது. ஆனால் சைவ சித்தாந்தம் கற்கிறவர்கள் இதை முழுதும் விட்டு விடுகிறார்கள். சிவஞான சித்தியாரின் விளக்கங்கள் இந்த அடிப்படையில்தான் நன்கு விளங்கும் என்று பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் சைவ சித்தாந்தத்தின் முக்கியத்துக்கு இடங்கொடுத்து தனது கருத்துரையில் பேசினார். ஸ்ரீ மெய்கண்டார் 'அத்துவிதமென்ற சொல்லாலே ஏகமென்னில் ஏகமென்று சுட்டுவதுண்மையின் அத்துவிதமென்ற சொல்லே அந்நிய நாத்தியை யுணர்த்துமாயிற்று' என்று கூறியதும் இத்தத்துவத்தின் அடிப்படையில்தான். சைவ சித்தாந்திகள் 'ஸ்போடா'வைப் பற்றி ஆராய்ச்சி செய்வதும் வேண்டியதே.

திரு. ந. சஞ்சீவி அவர்கள் "தமிழில் கடன் வாங்கிய வடசொற்களின் பொருள் திரிபு" என்ற பொருள் பற்றிப் பல எடுத்துக் காட்டுகள் தந்து பேசினார். தமிழ்ப் பிரயோகங்களில் சில வட சொற்கள் தனிப்பட்ட பொருள் பெற்றுள்ளன என்று கூறினார். சைவ சித்தாந்த பரிபாஷைச் சொற்களில் இந்தப் பொருள் பேதத்தைப் பல இடங்களில் காணலாம்.

இலங்கை டாக்டர் S. நடேச பிள்ளை
B. A., B. L. D. Litt.,

மறைவு

(நல். முருகேச முதலியார்)

நம் சமாஜத்தில் நெடுங்காலத் தொடர்புடையாரும், முன்னாள் இலங்கை அமைச்சருமான டாக்டர் S. நடேச பிள்ளையவர்கள் 13—1—65 அன்று காலமானார்கள். அவர்கள் சைவ சித்தாந்தத்திலும், தமிழிலும் நல்ல பயிற்சியும் அபிமானமுமுடையவர்கள். நம் சமாஜ முதலாண்டு விழாவுக்கு 1906 ல் சிதம்பரத்தில் அவர்கள் மாமனார் சர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமை தாங்கினார்கள். 1922 ல் சென்னையில் நடந்த 17-வது ஆண்டு விழாவிலும் அப்பெரியாரே தலைமை யேற்றார்கள்

மாமனாரைப் போலவே மருமகனாரம் நம் பிள்ளையவர்களும் 1955ல் சிதம்பரத்தில் நடந்த சமாஜப் பொன் விழாவிற்கும் 1956 ல் திருப்பெண்ணாகடத்தில் நிகழ்ந்த 51-ஆம் ஆண்டு விழாவிற்கும் தலைமையேற்று மாநாடுகளைச் சிறப்புற நடத்தித் தந்தார்கள். நம் சமாஜச் சார்பில் நடத்தப்பெறும சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளில் பட்டம் பெற்றவர்களைத் தகதவாறு மதிக்கச் செய்து இலங்கை அரசியலில் ஏற்றத்தை அளித்த பெருமை அவர்களுக்கே யுரியது. சமாஜ மாநாடுகள் இலங்கையில் நிகழ்ந்த சமயங்களிலெல்லாம் அவர்கள் பங்குகொண்டு தொண்டாற்றியுள்ளார்கள். தமிழகத்தில் நிகழ்ந்த மாநாடுகளிலும் அவர்கள் பலவற்றில் பங்கு பெற்றிருக்கின்றார்கள். சென்னையில் 1962-ல் நடந்த 57-ஆம் ஆண்டு விழாவில் "தாயுமானவர் சிறந்த சித்தாந்தி" என்பதைக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்ப் பல மேற்கோள்களுடன் பேசியது இன்றும் நம்மனோர் மனத்தில் ஒலித்துக்கொண்டே யிருக்கின்றது. அண்மையில் சகுந்தலை வெண்பா என்ற அரிய செய்யுள் நூலொன்றை யியற்றி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றம் செய்தது அன்பர்களுக்கு ஞாபகமிருக்கும்.

அவர் மாமனார் சர். பொன்னம்பல இராமநாதன் அவர்கள் நிறுவிய இராமநாதன் கல்லூரி, பரமேச்சுவரா கல்லூரி இவைகளைச் சேர்த்து ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமாக ஏற்படுத்த இடைவிடாது முயன்று இலங்கை சட்ட சபையில் சமீபத்தில் வேண்டிய சட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தார்கள். ஜெர்மன் பாஷையில் எழுதப்பெற்ற ரெவ்-டாக்டர் ஷோமிரசின் "சைவ சித்தாந்த" நூலைத்தாம் ஒரு ஜெர்மன் பேராசிரியரைக் கொண்டு ஆங்கில மொழிபெயர்ப்பு செய்து வைத்துள்ளதாகவும், கூடிய சீக்கிரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைகொண்டோ அல்லது இந்து அறநிலைப் பாதுகாப்புத் துறையார் உதவி கொண்டோ அந்தமொழிபெயர்ப்பை அச்சிட்டுவெளியிடவும் ஆவல் கொண்டிருந்தார். திருவருளால் அவர் கருத்து முட்டாது நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. திரு. பிள்ளையவர்களின் மறைவுக்கு அன்னார் உறவினர்களுக்கும், இலங்கை நேயர்களுக்கும் நமது அனுதாபம் உரித்தாகும். அவர்கள் போற்றி வளர்த்த இராமநாதன் அகாடமி அவர் புகழுடம்பாக நீடூழி வாழ்க!

திரு. நாகையா பிள்ளை மறைவு

நம் சமாஜத் தலைவர் திரு. ஜி. முத்துசாமி பிள்ளை அவர்களின் அன்புடைய மாமனார் திரு. ஜி. ஆர். நாகையா பிள்ளையவர்கள் 5—1—65 அன்று இவ்வுலகை விட்டுப் பிரிந்தது தெரிந்து வருந்துகின்றோம். அவர்கள் சமாஜ மாநாட்டுக்குப் பேரூருக்கு வந்திருந்தார்கள். தன் மருமகனாரின் சமய ஆக்கத்தொண்டு குறித்தும் நம்சமய மேம்பாடு குறித்தும் தெரிந்து அகமும் முகமும் மலர்ந்து வாழ்த்திச் சென்றார்கள். சென்ற ஆண்டு பழனியம்பதியில் சமாஜச் சார்பில் நிகழ்ந்த அந்தர்யோக வழிபாட்டிலும் கலந்து கொண்டார்கள். பழனியமர்பெருமானின்பால் பரம அன்புடையவராய் அப்பதியிலேயே வதிந்தும் வந்தார்கள். திடீரென இறைவன் அவர்களை ஆட்கொண்டான் எனத் தோன்றுகிறது. அவர்கள் ஆன்மா இறைவனிணையடி நீழலில் கலந்து இன்புற்றிருக்க அவனருளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

மதிப்புரை

குமரகுருபரன் பதினறுவதாண்டு மலர் கிடைக்கப் பெற்ருேம். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் திருக்கருணைப் பெருக்கால் மலர்ந்துளதாதலின் அதன் நறுமணப் பெருக்கு பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? தக்க படங்கள் பலவற்றைக் கொண்டு மிளிர்கின்றது. 25 அறிஞர்களின் சிறந்த கட்டுரைகளுடன் 96 பக்கங்களில் மாண்புறுகின்றது. இவற்றில் நான்கு கட்டுரைகள் ஆங்கிலத்தில் நம் சமயக் கருவூலத்தைத் தெளிவாக்கி அம்மொழி வல்லார் சித்தத்தையும் ஈர்க்கும் பெற்றியிலுள்ளன, காஞ்சி ஞானப் பிரகாச, சுவாமிகள் டாக்டர். பா. நடராசன், தெ. பொ. மீ., சைவப் பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை, திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற பெருமக்கள் பல அரிய சமய அனுபவங்களைப் பற்றி எழுதியிருக்கின்றனர். அவசியம் இது போன்ற திங்கள் இதழ்களை வாங்கிப் படித்து அறிவு விளக்கமும் ஆன்மலாபமும் பெறவேண்டுமேயொழிய பயனற்ற இதழ்களைப் படித்து வாழ்நாளை வீணுக்கக்கூடாது, வருடச் சந்தா ரூ 1—50; கிடைக்குமிடம்:— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீ வைகுண்டம், நெல்லை மாவட்டம்.

'காரியசித்தி மாலை'என்ற நூல்வரப்பெற்ருேம். ''செயலில் வெற்றிகாண இந்நூலிலுள்ள பாக்களைப் பாராயணம் செய்ய வேண்டும். இறைவனருள் கைவரப் பெற்று நினைப்பன எளிதில் முடியும்'' தான் அவ்வாறு பலன் பெற்றதாக இவ்வெளியீட்டாளர் கூறுகின்ருர். காசிப முனிவர் பாடியன. கச்சியப்ப முனிவரால்மொழி பெயர்க்கப்பட்டவை யாதலின் அப்பாடல்களின் சிறப்புப் பற்றிக் கூறவேண்டுவதில்லை. 17 பாக்களும் பொருளும் இந்நூலிலுள்ளன. விலை 15காசுகள் தபால்செலவு 10 காசுகள் கிடைக்குமிடம்:— சு. அ. இராமசாமிப் புலவர், 1/140, பிராட்வே, சென்னை-1.

''ஸ்ரீ நடேச ஞான தேசிகரின் தோத்திரத் திரட்டு'' என்னும் நூல் கைவரப் பெற்ருேம். பலபெருமக்கள் சுவாமிகளைப் பற்றிப் பாடிய பாக்களைக் கொண்ட நூல் இது. இந்நூலைப் படித்தால் வேதாந்த வித்தகராயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளின் அரும் பெரும் பண்புகள் படிப்போருக் குறுதுணையாய் வழிகாட்டும். (விலை 35 காசுகள் தபால் செலவுட்பட) கிடைக்குமிடம்:— சு. அ. இராமசாமிப் புலவர், 1/140, பிராட்வே, சென்னை-1.

(அம்பை சங்கரன்)

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் மூன்றைக் கூடிய விரைவில் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி. யில் அடுத்த மாத இதழை அனுப்புவதாயின் 75 புதுக்காசுகள் வீணாக அதிகம் செலுத்த வேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3.தெளிவான முழு விலாசம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்றுத் தங்கள் சந்தாத்தொகையினைத்தவருது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு: கே. இராமநாதன் செட்டியார் B. A. B. L, அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர்; சென்னை-4.

புதிய ஆயுள் உறுப்பினர்கள்:—

இவ்யாண்டு பேரூர் மாநாட்டில் சேர்ந்த ஆயுள் உறுப்பினர்கள் பெயர்கள் வருமாறு:—

1. திரு. P. K. நடராஜன், 25, பெரியசாமி மேற்கு வீதி, R. S புரம், கோயம்புத்தூர்-2.
2. திரு. C. P. நடராஜன், B.Com., F.C.A., S/o M. பழநியப்ப முதலியார், 189, இராஜா தெரு, கோயம்புத்தூர்.
3. திரு. N. மகாலிங்கம், M. L. A. 2-A, கிரீன்வேஸ் ரோடு, சென்னை-28.

பிற செய்திகள்

பிள்ளையார் பட்டியில் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் 10—1—65 ஞாயிறு மாலையில் திருவெம்பாவை திருப்பாவை விழா திரு. சுப்பிரமணியன் செட்டியார் M. A. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. காரைக்குடி திரு. சிங்காரவேலர், திரு. மா. கண்ணப்பர் முதலியோர் சொற்பெருக்காற்றினர்.

சங்ககிரி அருள்நெறித் திருக்கூட்டத்தின் பத்தாவது ஆண்டுவிழா 13, 14—1—65ல் ஸ்ரீ சோமேஸ்வரர் திருக்கோயிலில் நிகழ்ந்தது. முதல் நாள் மாதர் விழா வெனவும் இரண்டாம் நாள் பெருமக்கள் விழா வெனவும் எல்லோரும் பங்கு கொள்ளும் நிலையில் விழா சிறப்புற நிகழ்ந்தது. பல அறிஞர்கள் விரிவுரைகளாற்றினர்.

புரசைத் திருநெறிக் கழகத்தின் 47 ஆம் திங்கள் வழிபாடு 17—1—65 அன்று எழுமூர் செல்வவிநாயகர் கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது.

ஷை கழகத்தின் ஆதரவில் திருமுறை விழா 27—1—65 முதல் 31—1—65 முடிய புரசை வேம்படி விநாயகர் கோயிலில் நிகழ்ந்தது. பல பெருமக்கள் பன்னிரு திருமுறைகள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.

தை அமாவாசையும் திங்கட்கிழமையும் திருவோண நட்சத்திரமும் வியதீபாதயோகமும் கூடிய சூரியோதய புண்ணிய காலமே மகோதய காலம் எனப்பெறும். இக்காலத்தில் கோடிக்கரையில் நீராடுதல் சிறப்பு. வேதாரண்யம், கோடிக்குழகர் கோயில், திருவகத்தியான் பள்ளி என்பன அங்கு பாடல் பெற்ற தலங்கள். திருமறைக்காட்டிற்குச் சம்பந்தர் பதிகம் 4, அப்பர் பதிகம் 5, சுந்தரர் பதிகம் 1ம் திருவகத்தியான் பள்ளிக்குச் சம்பந்தர் பதிகம் 1ம் திருக்கோடிக் கரைக்குச் சுந்தரர் பதிகம் 1ம் உள்ளன.

அத்தகைய மகோதய புண்ணிய காலம் 1—2—65 (திங்கள்) தை அமாவாசை யன்று வந்ததால் பெருந்திரளான மக்கள் நீராடும் பொருட்டுக் கோடிக்கரை சென்றனர். அவர்கள் இறைவன் இன்னருள் சிறப்புகளையும் கேட்டுய்யும் வண்ணம் திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ, பி. ஓ. எல், அவர்களும் வித்துவான் திரு தா. ம வெள்ளை வாரணம் அவர்களும் முறையே வேதாரண்ய மகோதயச் சிறப்பு, திருமுறைச் சிறப்பு என்பன பற்றிச் சொற்பெருக்காற்றினர். காலங்கருதி இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த காசிமடத்தாரின் தொண்டு போற்றற்பாலது.

(துணையாசிரியர்)

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.